வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 12.12.2025 வெள்ளிக்கிழமை | இதழ் : 346 | பக்கங்கள் : 08

## இலங்கையின் மீட்பு முயற்சிக்கு ரூ.1,000 கோடி திரட்டும் ஐ.நா.

கொழும்பு, டிசெம்பர் 12


ஐக்கிய நாடுகள் (ஐ. நா.) சபை, உள்ளூர் மற்றும் சர்வதேச பங்கா ளர்களுடன் இணைந்து இலங்கை யின் மீட்பு முயற்சிக ளுக்கு ஆதரவளிப்பதற்காக அடுத்த 4 மாதங்களில் 3.53 கோடி அமெரிக்க டொலர் களை - சுமார் ஆயிரம் கோடி ரூபாயை திரட்ட முயற்சி எடுத்துள்ளது என்று ஐ. நாவின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி மார்க் ஆண்ட்ரே பிரான்சே தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் அவர் நடத் திய ஊடக சந்திப்பிலேயே மேற் கண்டவாறு கூறினார். அத்துடன்,

"டித்வா" புயலால் நாடு முழுவ தும் பெரும் அழிவு ஏற் பட்டதைத் தொடர்ந்து, ஐ. நா. பேரிடர் முகாமைத்துவ நிலை யத்துடன் இணைந்து ஏழு துறைகளை உள்ளடக்கிய ஒரு முன்னுரிமை பட்டியலைத் தயாரித்துள்ளது.

நிவாரணம் மற்றும் மீட்பு முயற்சிகளுக்கு அரசாங்கம் தலைமை தாங்குகிறது. ஐ. நா. மற்றும் பிற உள்ளூர், சர்வதேச பங்காளிகள் பல துறைகளில் தமது ஆதரவை வழங்குவார்கள். இந்த முயற்சிக்கு அவுஸ்திரே லியா, கனடா, ஐரோப்பிய ஒன்றியம், சுவிட்சர்லாந்து, ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா ஆகியவற்றின் ஆதரவுடன் ஐ. நா. ஏற்கனவே 95

07



## 3 வயது குழந்தைக்கு காயம்மீது மிளகாய் தூள் பூசி சித்திரவதை

### தாய், சிறிய தந்தையை கைது செய்ய வட்டுக்கோட்டை பொலிஸ் நடவடிக்கை

பு. கஜிந்தன்
யாழ்ப்பாணம், டிசெ. 12

3 வயது குழந்தையை அடித்ததுடன், அதனால் ஏற்ப ட்ட காயத்தின்மீது மிளகாய்த்தூள் பூசி சித்தி ரவதை செய்ததாகக் கூறப்படும் சிறியதந்தையை யும் தாயையும் பொலிஸார் தேடி வருகின்றனர்.

07

## பேரிடரால் ஏற்பட்ட இழப்புக்கு அரசு பொறுப்புக்கூற வேண்டும்

### பொதுஜன பெரமுன கட்சி சொல்கிறது

கொழும்பு, டிசெ. 12

காலநிலை குறித்து விடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை அறிவுறுத்தல்களை அடிப்படையாகக் கொண்டு உரிய நடவடிக்கைகளை எடுத்திருந்தால் உயிரிழப்பு களை தவிர்த்திருக்கலாம். பேரிடரால் ஏற்பட்ட உயிர், சொத்து அழிவுகளுக்கு அரசாங்கம்

07

## இலங்கை மீண்டெழ தேவையான உதவிகளை வழங்குவதற்கு தயார்

### ஜனாதிபதியிடம் நேரில் தெரிவித்தார் அமெரிக்க உப இராஜங்க செயலாளர்

கொழும்பு, டிசெ. 12

ஜனாதிபதி அநுரகுமார திஸ நாயக்கவின் தலைமையில் இலங்கை மீண்டும் கட்டி யெழுப்பப்படும். அதற்குத்

07



## பேரிடர் பாதிப்புக்கு பாப்பரசர் அனுதாபம்

கொழும்பு, டிசெ. 12

பேரிடரால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு வத்திக்கான் தனது ஒற்றுமையை பிணைத்துள்ளது என்று பாப்பரசர் 14ஆம் லியோ உறுதியளித்தார் என்று கொழும்பிலுள்ள வத்திக்கான் தூதரகத்தின் பொறுப்பா ளரான வண. மொன்சிஞ்ஞோர் றொபேர்ட்டோ லூச்சினி தெரிவித்துள்ளார்.

பேரிடரால் பாதிக்கப்பட்ட இலங்கையர்க ளுக்கு தனது ஆழ்ந்த அனுதாபங்களைத்

07

## மதத் தலங்களை சுத்தம் செய்யவும் 25 ஆயிரம் ரூபாய்!

கொழும்பு, டிசெ. 12

பேரிடரால் பாதிக்கப் பட்ட மதத் தலங்களை சுத்தம் செய்வதற்கும் 25 ஆயிரம் ரூபாய் கொடுப் பனவை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

பேரிடரால் பாதிக்கப்பட்ட

07

## மண்சரிவில் சிக்கி காணாமல் போனோருக்கு மரண சான்றிதழ்

கொழும்பு, டிசெ. 12

டித்வா புயல் தாக்கத் தைத் தொடர்ந்து ஏற்ப ட்ட வெள்ளம், நிலச்சரி வில் சிக்கிக் காணாமல் போன 203 பேருக்கும் மரண சானறிதழ் வழங் கப்படும் என்று பதிவா ளர் நாயகம் திணைக்க ளம் தெரிவித்துள்ளது.

திடீர் அனர்த்தம் ஏற்பட்டு இரண்டு வாரங் களுக்குப் பின்னரும் ஒரு நபர் காணாமல் போயி ருந்தால் மேலதிக தகவல் ஏதும் கிடைக்காதபட் சத்தில், அவருக்கு மரணச் சான்றிதழ் வழங்க வசதி செய்யும் சிறப்பு வர்த்த மானி அறிவிப்பு டிசெம்பர் 2ஆம் திகதி

07

## இடரால் காணாமல்போனவர்களை தேடும் பணி தொடர்ந்து நடைபெறும்

கொழும்பு, டிசெ. 12

டித்வா சூறாவளியால் ஏற்பட்ட நிலச்சரிவு மற்றும் வெள்ளப் பெருக்கில் காணாமல் போனவர்களைத் தேடும் பணிகள் தொடர்ந்து நடைபெறும் என தெரிவிக் கப்பட்டுள்ளது.

காணாமல் போனவர்களின் குடும்ப உறுப்பினர் களோ அல்லது உறவினர்களோ கோரினால் அன்றி, அல்லது பணியை நிறுத்த அரசாங்கம் கொள்கை முடிவு எடுத்தால் அன்றி, இந்தத் தேடுதல் நடவடிக்கை கள் நிறுத்தப்படாது என்றும்

07

## யாழ். வந்த சென்னை விமானம் தரையிறங்க முடியாது திரும்பியது

த.பிரதீபன்
யாழ்ப்பாணம், டிசெ. 12

சென்னையிலிருந்து வந்த விமானம் சீரற்ற வானிலையால் யாழ்ப்பா ணம் சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்க முடியாது திரும்பிச் சென் றது.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் சீரற்ற காலநிலை நிலவுகிறது. இந்த நிலையில், நேற்று சென்னையில் இருந்து புறப்பட்ட விமானம் யாழ்ப்பாணம் சர்வதேச (பலாலி) விமான நிலை யத்தை வந்தடைந்தது. ஆனால், கடுமையான மேகமூட்டம் காணப்பட் டமையாலும்

07

## பேராசிரியர் தருமரட்ணம் காலமானார்



யாழ்ப்பாணம், டிசெ. 12

யாழ்ப்பாண பல்கலை க்கழக கணிதவி யல் வாழ் நாள் பேராசிரியர்

07

## பாதிக்கப்பட்ட சகல மக்களுக்கும் சலுகைகள் சென்றடைய வேண்டும்

### ரஜீவன் எம். பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 12

அரசியல் பேதங்களை கடந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு சலுகை வழங்கப்பட வேண்டும் என ஜனாதிபதி நினைக்கிறார். இதனை எல்லோரும் உணர்ந்து ஒரே கோட்டில் பயணம் செய்வதன் மூலமே நாட்டையும் மக்களையும் மீட்க முடியும் - இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் ஜெ.ரஜீவன் தெரிவித்துள்ளார்.

07



## சிறுமி வன்புணர்வு; மாமனுக்கு மறியல்

த. பிரதீபன்
யாழ்ப்பாணம், டிசெ. 12

சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்திய சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட சிறுமியின் மாமன் விளக்க மறிய லில் வைக்கப்பட்டுள்ளார்.

இளவாலையை சேர்ந்த சந்தேகநபர் கடந்த 2021ஆம் ஆண்டு 13 வயது சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட் டுள்ளது.

07

உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிக்குளத்தில் காற்றாலை கோபுரங்களை நிறுவ அனுமதி

கொழும்பு, டிசெ. 12

மன்னார், முள்ளிக்குளம் பிரதேசத்தில் தலா 50 மெகா வோட் காற்றாலை மின்சார உற்பத்தி நிலையங்கள் இரண்டை நிறுவுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

2030ஆம் ஆண்டளவில் நாட்டுக்கான மின்சார வழங்கலின் 70 வீதம் மீள் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மூலங்களிலிருந்து பூர்த்தி செய்யும் குறிக்கோளை அடைவதற்கான அரசின் விரிவான திட்டத்துக்கமைய 20 ஆண்டு தொழிற்பாட்டு காலப்பகுதியில் நிர்மாணித்தல், உரித்தை கொண்டிருத்தல் மற்றும் அமுல்படுத்துதல் அடிப்படையில் 100 மெகாவாற்று காற்றாலை மின்னுற்பத்தி பூங்கா (தலா 50 மெகாவாற்று கொண்ட 02 மின்னுற்பத்தி நிலையங்கள்) திட்டத்தை அமுல்படுத்துவதற்காக தனியார் துறையின் ஆர்வமுள்ள அபிவிருத்தியாளர்களிடமிருந்து முன்மொழிவுகளைக் கோருவதற்காக 2025-02-10 திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதற்கமைய, சர்வதேச போட்டி விலைமனு கோரல் முறைமையைப் பின்பற்றி மேற்குறித்த திட்டத்தை அமுல்படுத்துவதற்கான முன்மொழிவு கோரப்பட்டு, ஏழு பேர் தமது திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பித்துள்ளார்கள்.

மேற்குறித்த முன்மொழிவுகளை மதிப்பீடு செய்த பின்னர், அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பேச்சில் உடன்பாட்டு குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விதந்துரைகளின் அடிப்படையில் Consortium of Vidullanka PLC & David Pieris Motor Company (Lanka) Limited மற்றும் Wind Force PLC ஆகியவை காற்றாலை மின்னுற்பத்தி வசதிகளை நிறுவுவதற்கான ஒப்பந்தத்தை வழங்குவதற்காக வலுசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. (ஐ)

# பேரிடர் பாதித்த மக்களுக்காக யாழ். வணிகர் கழகம் உதவி!



யாழ்ப்பாணம், டிசெ. 12

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக ஒரு தொகை பொருட்களை யாழ். வணிகர் கழகம் வழங்கியது.

பாய்கள், படுக்கை விரிப்புகள், நுளம்பு வலைகள் என்பவற்றை நேற்றைய தினம் யாழ். மாவட்ட அரச அதிபர் ம. பிரதீபனிடம் வணிகர் கழகத்தினர் வழங்கினர்.

இதன்போது, பாதிக்கப்பட்ட மக்களுக்கான அத்தியாவசியப் பொருட்களின் தேவைப்பாடுகள் தொடர்பில் ஆராயப்பட்டது. இது தொடர்பில் சாதகமாக பரிசீலிப்பதாகவும் ஏனைய ஒருங்கிணைந்த செயல்பாடுகளுக்கு ஒத்துழைப்புகளை வழங்குவதாகவும் வணிகர் கழக பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இந்தக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் கே. சிவகரன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி பா. ஜெயகரன், பிரதம கணக்காளர் எஸ். கிருபாகரன், உதவி மாவட்ட செயலாளர் உ.தார்சினி, அனர்த்த முகாமைத்துவ பிரதிப்பணிப்பாளர் ரி. என். சூரியராஜா, வணிகர கழக தலைவர் ஜனத்குமார் மற்றும் சங்கத்தின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (ஐ-05)

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கலைமலர் சஞ்சிகை வெளியீட்டு விழா!



யாழ்ப்பாணம், டிசெ. 12

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கலைமலர் சஞ்சிகை வெளியீட்டு விழா நேற்று முன்தினம் புதன்கிழமை கலாசாலை ரதிலஷ்மி மண்டபத்தில் நடைபெற்றது.

அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராசா கலந்துகொண்டு சஞ்சிகையை வெளியிட்டு வைத்தார்.

சஞ்சிகையின் முதல் பிரதியை கலாசாலையின் முன்னாள் அதிபர் வீ. கருணலிங்கம் பெற்றுக் கொண்டார்.

கலைமலர் சஞ்சிகையின் பதிப்பாசிரியரும் விரிவுரையாளருமான வே.சேந்தன் பதிப்பாசிரியர் உரை ஆற்றினார்.

கலாசாலையின் பிரதி அதிபர் க. செந்தில்குமரன் நன்றியுரை ஆற்றினார். ஆங்கில நெறி ஆசிரிய மாணவி தர்மினி சம்பத்குமார் நிகழ்வுகளை தொகுத்து வழங்கினார்

இந்த நிகழ்வில் முன்னாள் உபஅதிபர் சத்தியா ரஞ்சித், முன்னாள் விரிவுரையாளர்களான வ. சி. குணசீலன், சரா. புவனேஸ்வரன், மு. ஜெயகுமாரி முன்னாள் ஆசிரிய மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-05)

# தீ விபத்தில் ஆசிரியை பலி

யாழ்ப்பாணம், டிசெ. 12

வீட்டில் இடம்பெற்ற தீ விபத்தில் படுகாயமடைந்து ஆசிரியை ஒருவர் உயிரிழந்தார்.

இரு பிள்ளைகளின் தாயாரான நிஷாந்தினி நித்திலவர்ணன் (வயது 43) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார். நேற்று முன்தினம் வீட்டில் இடம்பெற்ற தீ விபத்தில் படுகாயமடைந்த அவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பின்னர், அவர் நேற்றைய தினமே யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். எனினும், அவர் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி ஆசிரியையே இவ்வாறு உயிரிழந் தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கடற்படையின் பிடியிலுள்ள காணிகள் விடுவிக்கப்படும்

## வடபிராந்திய கடற்படை தளபதி

யாழ்ப்பாணம், டிசெ. 12

"யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடற்படையின் பயன்பாட்டிலுள்ள காணிகள் சீரான நடைமுறைகளில் விடுவிக்கப்படும். தேவையான காணிகள் முறையாக பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்", என்று வடபிராந்திய கடற்படைத் தளபதி றியல் அட்மிரல் லியனஹமகே மாவட்ட செயலரிடம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இருவருக்கும் இடையே நடந்த சந்திப்பிலேயே இந்த உறுதியை வடபிராந்திய கடற்படை தளபதி வழங்கினார்.

மேலும், இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி, கடல் வழியால் மேற்கொள்ளப்படும் கடத்தல், காணி விடுவிப்பு, வட தாரகை கப்பல் திருத்தம், எழுதாரகை கப்பலை பயன்பாட்டிற்கு கொண்டுவருதல், கடற்கரை தூய்மைப்படுத்தல், திண்மக்கழிவு பொறிமுறை, கடற்கரை வீதி புனரமைப்பு உள்ளிட்ட மிக முக்கியமான விடயங்கள் ஆராயப்பட்டு ஆக்கபூர்வமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன - என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# புதிய தமிழ் அரசியல் கட்சி யாழில் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், டிசெ. 12

அகில இலங்கை மக்கள் எழுச்சி என்ற பெயரில் உருவாக்கப்பட்ட புதிய அரசியல் கட்சியின் மக்கள் தொடர்பாடல் தலைமையகம் நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்டது.

அருள் ஜெயந்திரனை செயலாளர் நாயகமாகக் கொண்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை முன்பாக நேற்றைய தினம் இந்தக் கட்சி பணிமனை திறந்து வைக்கப்பட்டது.

இதன்போது, "தமிழ் பரப்பில் இருக்கும் பல்வேறு கட்சிகளுக்குள் முற்றிலும் மாறுபட்ட நோக்குடன் தமிழ்த் தேசியம் சாராத கட்சியாக இதனை ஆரம்பித்துள்ளோம்.", என்று அதன் பொதுச் செயலாளர் கூறினார். (ஐ-05)

# முல்லைத்தீவு, கொக்கிளாய் கடற்கரைகளில் சிரமதானம்



முல்லைத்தீவு, டிசெ. 12


பேரிடரால் கடற்கரைகளில் தேங்கிய கழிவுகள் கிளீன் சிறீ லங்கா வேலைத் திட்டத்தின் கீழ் துப்புரவு செய்யப்பட்டன.

முல்லைத்தீவு கடற்கரை, கொக்கிளாய் முகத்துவார கடற்கரை என்பனவே நேற்றைய தினம் இவ்வாறு சுத்தம் செய்யப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அ. உமாமகேஸ்வரன் தலைமையில் முல்லைத்தீவு கடற்கரையும் கரைதுறைப்பற்று பிரதே செயலர் விஜயகுமார் தலைமையில் கொக்கிளாய் முகத்துவார கடற்கரையும் சுத்தம் செய்யப்பட்டன.

மாவட்ட, பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், இராணுவம், கடற்படை, பொலிஸ் கரைதுறைப்பற்று பிரதேச சபையினர் எனப் பலர் இந்த சிரமதா னப் பணியில் ஈடுபட்டனர். (ஐ-06)

# வெள்ளம் பாதித்த 500 பேருக்கு ஆவரங்காலில் உலருணவு பொதி



யாழ்ப்பாணம், டிசெ. 12

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட ஆவரங்காலைச் சேர்ந்த 500 குடும்பங்களுக்கு உலருணவு பொதிகள் வழங்கப்பட்டன.

ஆவரங்கால் சர்வோதய வெளிநாட்டு ஒன்றியத்தின் நிதிப்பங்களிப்பில் ஆவரங்கால் மேற்கை சேர்ந்த குடும்பங்களுக்கே இந்த உலருணவு பொதிகள் வழங்கப்பட்டன. கடந்த வாரத்தில் மூன்று நாட்களாக இந்த உலருணவு பொதிகள் வழங்கப்பட்டன. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
12.12.2023 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், கார்த்திகை 26

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# உலக அரசியல் மாற்றத்தின் அறிகுறி

ஒருபுறம் இந்தியப் படையினர் மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். மறுபுறம் அமெரிக்கப் படையினரும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுவருகின்றனர். இந்தக் காட்சியை முன்வைத்து பின்னோக்கி சிந்தித்தால் ஒரு காலத்தில் அமெரிக்கப் படையினர் இலங்கையில் கால் பதித்துவிடலாம் - அதற்கான நகர்வுகள் இடம்பெறுகின்றன என்றவாறான அச்சம் டில்லியிடம் இருந்தது.

அன்றைய உலக அரசியல் போக்கின் விளைவாகவே அவ்வாறானதோர் அச்சம் உருவாகியிருந்தது. இலங்கையின் கிழக்கு மாகாணத்திலுள்ள திருகோணமலை துறைமுகத்தை அமெரிக்க படையினருக்கு வழங்கும் நோக்கில் அப்போதைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன இரகசிய நகர்வுகளில் ஈடுபட்டு வருவதான சந்தேகம் பலமாக இருந்தது. இவ்வாறானதொரு பின்னணியில்தான் பென்டகன் திருகோணமலையின்மீது கண் வைத்திருப்பதான கதைகள் உருவாகின.

ஜே. ஆர். ஜெயவர்த்தன ஓர் அமெரிக்கா சார்பானவராகவே அப்போது நோக்கப்பட்டார். குறிப்பாக, இந்திரா காந்தி தலைமையிலான டில்லிக்கு எதிராக அவர் செயல்படுவதான பார்வையே மேலோங்கியிருந்தது. இந்திய வெளியக உளவுத் துறையான றோவின் அப்போதைய பணிப்பாளராக இருந்த ஆர். என் காவோ இந்த விடயத்தை நேரடியாகக் கூறினாரென பேராசிரியர் றொகான் குணரத்ன தனது நூலில் பதிவு செய்திருக்கிறார்.

ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் அமெரிக்க சார்பும் இந்தியாவை அவமதிக்கும் வகையில் செயல்பட்டதன் விளைவாகவுமே இந்திரா காந்தி கொழும்புமீது கடுமையான நிலைப்பாடுகளை எடுத்ததான பார்வை உண்டு. அமெரிக்கப் படைகளின் பயன்பாட்டுக்கு திருகோணமலையை வழங்க ஜே. ஆர். தீர்மானித்திருந்தாரா என்பதற்கு தெளிவான பதில்கள் இல்லாவிட்டாலும்கூட, அவர் இந்தியாவை உதாசீனம் செய்யும் வகையில் செயல்பட்டிருந்தார். அதன் விளைவாக இந்திய கொள்கை வகுப்பு சமூகம் அதிருப்தியடைந்திருந்தது. முக்கியமாக இந்திரா காந்தி அதிருப்தியடைந்திருந்தார் என்பது ஏற்புடைய வாதம்தான்.

அன்றைய இரு துருவ சர்வதேச அரசியல் ஒழுங்கில் இந்தியா அமெரிக்காவின் நட்பு சக்தியல்ல. மாறாக அணிசாரா நிலைப்பாட்டைக் கொண்டிருந்தாலும்கூட, சோவியத்துடன் நெருக்கமான பிணைப்பில் இருந்தது. அந்தக் காலத்தில் பிராந்தியத்தில் இந்தியாவின் செல்வாக்கை கேள்விக்கு உள்ளாக்கும் நோக்கில் அமெரிக்கா உள்நுழைவதை இந்தியா விரும்பியிருக்கவில்லை. இதன் விளைவாகவே ஜே. ஆரின் அமெரிக்க சார்பு நிலைப்பாட்டை இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான ஒன்றாக நோக்கியது. இதன் விளைவாகவே இலங்கையின் உள்விவகாரத்தில் இந்தியா நேரடியாகத் தலையீடு செய்யும் முடிவை எடுத்திருந்தது. இதுவே, பின்னர் தமிழ் ஆயுத இயக்கங்களுக்கான இரகசிய ஆயுதப் பயிற்சியாக மாறி பின்னர் இந்திய - இலங்கை ஒப்பந்தமாக மாற்றமடைந்தது. விடயங்களை பின்னோக்கி பார்த்தால் ஒருவேளை ஜே. ஆர். ஜெயவர்த்தன இந்தியாவை உதாசீனம் செய்யும் நோக்கில் சிந்திக்காமல் முக்கியமாக இந்திரா காந்தியின் பிராந்திய தலைமைத்துவத்தை ஏற்றுக்கொண்டு சென்றிருந்தால் தமிழ் ஆயுத இயக்கங்களுக்கு பயிற்சியளிக்கும் நிலைக்கு இந்தியா சென்றிருக்காது. விடயங்கள் இராஜதந்திர எல்லைக்குள்ளேயே இருந்திருக்கும்.

ஆனால், இன்றைய அரசியல் மாற்றங்கள் தலைகீழானது. இந்தியாவும் அமெரிக்காவும் இப்போது மூலோபாய பங்காளிகளாகவே இருக்கின்றன. அமெரிக்காவின் அனைத்து நகர்வுகளுடனும் இந்தியா இணைந்ததாக இல்லாவிட்டாலும் அமெரிக்காவின் நகர்வுகளை அச்சத்துடன் நோக்கி அதற்கு எதிராக செயல்படும் இந்தியா அல்ல இப்போதிருப்பது. பேரனர்த்தத்தின் மீட்புப் பணிகளில் இந்தியப் படையினரும் அமெரிக்கப் படையினரும் அருகருகே இருப்பதானது இந்த மாற்றத்துக்கான சான்றாகும்.

# டித்வா புயலினால் ஏற்பட்ட சேதம் தகவல்கள் சேகரிக்க அரசு திட்டம்

## நிதி அமைச்சின் செயலர் ஹர்ஷன சூரியப்பெரும

கொழும்பு, டிசெ. 12

டித்வா சூறாவளியால் சேதமடைந்த வர்த்தகங்கள் மற்றும் சொத்துக்கள் பற்றிய தகவல்களையும் தரவுகளையும் சேகரிக்க தேசிய திட்டமிடல் திணைக்களம் திட்டமொன்றைத் ஆரம்பித்துள்ளதாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும தெரிவித்துள்ளார்.

காணொளிப் பதிவில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பிரதேச செயலகங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களைத் தொடர்பு கொள்வதன் மூலம் தரவுகளையும் தகவல்களையும் பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

அந்தத் தரவுகளையும் தகவல்களையும் தொடர்புள்ள இடங்களுக்குச் சென்று மிகவும் துல்லியமாகப் பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

அதை துரிதப்படுத்த டிஜிற்றல் தொழில்நுட்பம் மூலம் அறிக்கையிட உத்தேசித்துள்ளோம்.

அதற்கான தகவல் கட்டமைப்பை மில்லெண்ணியம் இஎஸ் பிநிறுவனம் இலவசமாகத் தயாரித்துள்ளதோடு மைக்றோசொவ்ற் நிறுவனம் அதற்குத் தேவையான ஆதரவை வழங்கியுள்ளது.

றீபில்டிங் சிறீலங்கா திட்டத்திற்காக பல நாடுகள் பெருமளவான நிதி மற்றும் பொருள் உதவிகளை வழங்கியுள்ளன.

மேலும் உதவிகள் கிடைத்து வருகின்றன.

வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் வழங்கிய தகவல்களின்படி, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, இங்கிலாந்து, மாலைதீவு, அமெரிக்கா, நேபாளம், சுவிட்சர்லாந்து, கனடா, அயர்லாந்து, கொரியா போன்ற நாடுகளும் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகிய நிறுவனங்களும் அத்தகைய நிதி உதவிகளை வழங்க உடன்பட்டுள்ளன.

பேரழிவு நடைபெற்ற உடன் துரிதமாக, இந்தியா மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகள் பொருள் உதவிகளை வழங்கியதோடு மாலைதீவு, அவுஸ்திரேலியா, பங்களாதேஷ், ஐக்கிய அரபு இராஜ்ஜியம், சுவிட்சர்லாந்து மற்றும் கட்டார் போன்ற பல நாடுகளும் பொருள் உதவிகளை வழங்கின-என்றார். (அ)

### க.பொ.த. உயர்தரப் பரீட்சை;

# இறுதி தீர்மானம் ஜனவரியில்!

கொழும்பு, டிசெ. 12

மாற்றியமைக்கப்பட்ட கல்வி பொது தராதர உயர்தரப் பரீட்சைத் திகதிகள் 2026 ஜனவரி மாதத்தில் தீர்மானிக்கப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

தடங்கலின்றிப் பரீட்சைக்குத் தயாராவதற்காக மாணவர்களுக்கு, ஈ-தக்சலாவ இலத்திரனியல் தளங்களை அணுகுவதற்கான வசதியினை கல்வி அமைச்சு வழங்குகிறது.

நிச்சயமற்ற தன்மையைக் குறைப்பதற்கு விரைவாகப் பதிலளிக்கும் வகையில், 'டித்வா' சூறாவளிக்குப் பிந்தைய கல்வித் தொடர்ச்சியை உறுதி செய்வதற்காக, ஒத்திவைக்கப்பட்ட க.பொ.த. உயர்தரப் பரீட்சைகள் 2026 ஜனவரி 12ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை நடத்தப்படுமென கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த எதிர்பாராத அனர்த்த சூழ்நிலையில் மாணவர்கள் எதிர்கொள்ளும் சவால்களைப் புரிந்து கொள்ளும் வகையில், கல்வி அமைச்சு தொடர்ச்சியான கல்வி ஆதரவை வழங்குவதற்காகச் செயற்பாட்டு ரீதியாக இலத்திரனியல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகின்றது.

தேசிய இ-கற்றல் தளமான ஈ-தக்சலாவிற்கான அணுகலை மேம்படுத்துவதன் மூலம், மாணவர்கள் எந்தவொரு இடத்திலிருந்தும் பாட உள்ளடக்கங்கள் மற்றும் கடந்த கால வினாத்தாள்களைப் பெற இது வழிவகுக்கிறது.

பாடசாலை மூடப்படுதல் மற்றும் வெளிப்புற நெருக்கடிகள் எவ்வாறாக இருப்பினும், மாணவர்கள் பரீட்சைக்குத் தடங்கலின்றித் தயாராவதை இந்த முயற்சி உறுதி செய்யும்.

கல்வி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் பிரதமரின் டிஜிற்றல் மயமாக்கலுக்கான செயலணி ஆகியன இணைந்து மேற்கொண்ட அர்ப்பணிப்பு மிக்க கூட்டு முயற்சிகள் மூலமாகவே கல்வி ஆதரவை இலத்திரனியல் மயமாக்கும் விரைவான நடவடிக்கை சாத்தியமாகி இருக்கின்றது.

இவர்களின் துரித ஒருங்கிணைப்பு, அத்தியாவசிய கற்றல் உள்ளடக்கங்கள் ஒழுங்கமைக்கப்படுதல், பதிவேற்றம் செய்தல் ஆகியன மாணவர்கள் இதனை அணுகுவதற்கு வழி வகுத்திருக்கின்றது.

எதிர்காலத்தில், கல்வி பொது தராதர சாதாரண தர மாணவர்களுக்காகவும், 2026 பெப்ரவரி மாதம் முதல் இதேபோன்ற இலத்திரனியல் கற்றல் வள வசதி பெற்றுக் கொடுக்கப்படும்.

இது எதிர்பாராத சவால்களுக்கு முகம் கொடுக்கும் ஆற்றலைக் கொண்ட இலங்கையின் கல்வி முறைமையில், வலுவான, டிஜிற்றல் மயமாக்கப்பட்ட கல்வி முறைமையை நோக்கிய ஒரு குறிப்பிடத்தக்க படியாகும். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கனவு நனவாகும்.

**இடபம்**
பழைய பிரச்னைகளுக்கு சுமூக தீர்வு காண்பீர்கள். எதிர்பாராத செலவுகள் வந்தாலும் எதிர்பார்த்த பணம் வந்து சமாளிப்பீர்கள். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள்.

**மிதுனம்**
கம்பீரமாக பேசி சில காரியங்களை முடிப்பீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். தைரியம் கூடும் நாள்.

**கடகம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்- மனைவிக்குள் இருந்துவந்த பிரச்சினைகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும்.

**சிம்மம்**
ராசிக்கு சந்திரன் இருப்பதாலும் ஓய்வின்றி உழைக்க வேண்டி இருக்கும். வியாபாரத்தில் புது முதலீடுகளை தவிர்க்கவும். மறைமுக நெருக்கடிகள் வந்து நீங்கும். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும்.

**கன்னி**
எளிதாக முடிய வேண்டிய விஷயங்கள் கூட பல முறை போராடி முடிப்பீர்கள். பிள்ளைகளின் உணர்வுகளை புரிந்து கொள்ளுங்கள். வாகனம் அடிக்கடி தொந்தரவு தரும். நிதானம் தேவைப்படும் நாள்.

**துலாம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். உங்கள் திறமை வெளிப்படும். மதிப்புக் கூடும் நாள்.

**விருட்சிகம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் முடிவுகள் எடுப்பீர்கள்.

**தனுசு**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் நீங்கள் குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். பணப் புழக்கம் கணிசமாக உயரும்.தொழிலில் லாபம் வரும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்து முடிக்கப் பாருங்கள். உங்கள் பெயர் கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

**கும்பம்**
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும்.

**மீனம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். உத்தியோகத்தில் சில புதுமைகளை செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். யோகம் கிட்டும்.

# வட மாகாண கடற்றொழிலாளர் இணையம் இந்திய பிரதமருக்கு மகஜர் அனுப்பிவைப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 12

வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தால் இந்திய பிரதமருக்கு மகஜர் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அண்மைய நாட்களாக வடமாகாணத்தின் மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு கடற்பரப்புகளுக்குள் அத்துமீறி உள் நுழையும் இந்தியாவின் பாண்டிச்சேரி பகுதி இழுவை படகுகளால் வடமாகாண மீனவர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரம் அழிக்கப்படும் செயல்பாடு வடக்கு கடற்பரப்பில் அதிகரித்து வருகின்றது.

இந்த நிலையில், இந்திய இழுவை படகுகளால் ஏற்படும் பிரச்னைகள் சம்பந்தமாக இந்திய பிரதமருக்கு மகஜர் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.




யாழ் இந்தியத் துணைத்தூதுவர் சாய் முரளியிடம், வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தினர் இந்த மகஜரை நேற்று முன்தினம் யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தில் வைத்து கையளித்தனர்.

(எ-05)



## நல்லூரில் ஆறுமுக நாவலரின் குருபூஜை நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ. 12

சிறீ ல சிறீ ஆறுமுக நாவலர் பெருமானின் 146 ஆவது குருபூஜை நிகழ்வு நல்லூரில் உள்ள ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் புதன்கிழமை பிரம்மசிறீ கோபாலசர்மா தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

நீர்வேலி சிறீ முருகன் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் பஞ்சபுராணம் ஓதலோடு நாவலர் பெருமானின் பெருமை கூறும் பேச்சு நிகழ்வும் இணுவில் இளந்தொண்டர் சபை அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பண்ணிசை கச்சேரியும் நடைபெற்று, தொடர்ந்து வழிபாட்டில் இணைந்து கலை நிகழ்வு வழங்கிய மாணவர்கள் பாராட்டு பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

(எ)

## மன்னாரில் கஞ்சாவுடன் இருவர் கைது

மன்னார், டிசெ. 12

மன்னார் - பள்ளிமுனை பகுதியில் கஞ்சாவுடன் இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படை புலனாய்வுப் பிரிவிலிருந்து கிடைத்த தகவலுக்கமைய, மன்னார் ஊழல் குற்ற விசாரணை பிரிவின் அதிகாரிகள் குழுவினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு இந்தச் சம்பவம் பதிவாகியுள்ளது.

இவர்களிடமிருந்து 06 கிலோ 115 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் 34 மற்றும் 41 வயதுடைய, மன்னார் பகுதியைச் சேர்ந்தவர்கள் என தெரிய வந்துள்ளது.

மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# பகிடிவதை குற்றச்சாட்டில் கைதான மாணவர்களின் மறியல் காலம் நீடிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 12

பகிடிவதை குற்றச்சாட்டில் கைதான யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட மாணவர்கள் 19 பேரின் விளக்கமறியல் காலம் இன்று வரை நீடிக்கப்பட்டது.

பல்கலைக்கழகத்துக்கு வெளியே உள்ள வீடொன்றுக்கு கனிஷ்ட மாணவர்களை கூட்டிச் சென்று தாக்குதல் நடத்தி பகிடிவதையில் ஈடுபட்டுள்ளனர் என்ற குற்றச்சாட்டில் 19 மாணவர்கள் கடந்த மாதம் 29ஆம் திகதி கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி நேற்று முன்தினம் வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

விளக்கமறியல் காலம் முடிவடைந்த பின்னர் நேற்று முன்தினம் மீண்டும் யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றத்தில் சந்தேக நபர்கள் ஆஜர்படுத்தப்பட்டனர்.

விசாரணைகளை முன்னெடுத்த மேலதிக நீதிவான் உசைன், சந்தேக நபர்கள் 19 பேரையும் இன்று 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

(எ-03)

## "வடமராட்சி கிழக்கு போக்குவரத்து பிரச்னைக்கு வெகுவிரைவில் தீர்வு"

யாழ்ப்பாணம், டிசெ.12

வடமராட்சி கிழக்கு பகுதியில் ஏற்படும் போக்குவரத்து பிரச்னைகளுக்கு வெகுவிரைவில் ஒரு தீர்வு கொண்டு வருவோம் என்று பாராளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் ஊடகங்களுக்கு மேலும் கூறுகையில்,

யாழ்ப்பாணத்தில் பல பிரச்னைகளை கொண்டதும், அபிவிருத்தியில் பின்தங்கிய பிரதேசமாக வடமராட்சி கிழக்கு காணப்படுகின்றது. இந்த பிரதேசத்தில் பல அபிவிருத்திகளை செய்ய வேண்டிய கடமை எமக்கு உள்ளது.

அண்மைக்காலமாக வடமராட்சி கிழக்கில் அரச மற்றும் தனியார் பேருந்துகள் தமது பணியை ஒழுங்காக செய்வது இல்லை மற்றும் பரீட்சை காலங்களில் பேருந்துகள் இடையில் பழுதடைந்து நிற்பது போன்ற செயல்பாடுகள் அதிகரித்து வருகின்றன.

இதற்கான தீர்வை வெகுவிரைவில் நாம் எடுப்போம். இப் பிரதேசத்தில் அதிகளவான தொழில் முனைவோர்களை கொண்டு வந்து இப் பிரதேசத்தின் அபிவிருத்தியை ஊக்குவிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.


(எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# இலங்கையின் 20 வீதமான நிலப்பரப்பு நீரில் மூழ்கியது



**கொழும்பு, டிசெ. 12**

**25 மாவட்டங்களை பாதிக்கும் வகையில் இலங்கையை தாக்கிய 'டித்வா' புயல் காரணமாக ஏற்பட்ட வெள்ளம் காரணமாக ஏற்பட்ட சேதங்கள் குறித்து ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டம் புதிய அறிக்கை யொன்றை வெளியிட்டுள்ளது.**

அதற்கமைய, அவர்களது புதிய புவியியல் பகுப்பாய்வின் படி, புயலால் ஏற்பட்ட வெள்ள நீர் 1.1 மில்லியன் ஹெக்ரேயருக்கும் அதிகமான நிலப்பரப்பை பாதித்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இதன்படி நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 20 வீதம் அல்லது ஐந்தில் ஒரு பங்கு நீரால் மூழ்கியுள்ளதுடன், வீடுகள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அத்தியாவசிய சேவைகளுக்கு குறிப்பிடத்தக்க சேதங்கள் ஏற்பட்டுள்ளமையும் இதில் தெரியவந்துள்ளது.

இதற்கிடையில் "டித்வா" சூறாவளி காரணமாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 2.3 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் பெண்கள் எனவும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டம் தெரிவித்துள்ளது. (அ)

# பேரிடரால் உயிரிழந்தவர்களுக்கு இறப்பு சான்றிதழ் வழங்க ஏற்பாடு

கொழும்பு, டிசெ. 12

டித்வா புயலால் ஏற்பட்ட மண்சரிவுகள் மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக இறந்த அல்லது காணாமல் போன நபர்களின் இறப்புகளைப் பதிவுசெய்வதற்குத் தேவையான சட்ட விதிகள் செயற்படுத்தப்பட்டுள்ளதாக பதிவாளர் நாயகத் திணைக்களம் அறிவித்துள்ளது.

பேரிடரின் விளைவாக ஒரு நபர், உறவினர் அல்லது நெருங்கிய நண்பர் காணாமல்போனதாக அறிவித்தால், அத்தகைய காணாமல்போனவர்களின் இறப்புகளை அதிகாரபூர்வமாக பதிவு செய்வதற்கான சட்ட நடவடிக்கைகள் நிறுவப்பட்டுள்ளதா கக் குறிப்பிட்டு திணைக்களத்தால் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

திணைக்களத்தின் அறிவித்தலின்படி, தேசிய பேரிடர் பகுதிகள் மற்றும் நிர்வாக மாவட்டங்களில் இறப்புகளைப் பதிவுசெய்வதற்கான தற்காலிக ஏற்பாடுகள் தொடர்புடைய சட்டத்தின் படி டிசெம்பர் 02 அன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

இந்த விதிகளின் கீழ் காணாமல்போனவரின் மரணத்தைப் பதிவுசெய்வதற்குத் தேவையான தகவல்களைக்கொண்ட விண்ணப்பப் படிவம், உண்மைகளை உறுதிப்படுத்தும் பிரமாணப் பத்திரத்துடன், அந்த நபர் கடைசியாக வசித்த பகுதியின் கிராம அலுவலரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கிராம அலுவலர் விண்ணப்பத்தை பிரதேச செயலாளருக்கு அனுப்பவேண்டும்.

பின்னர், கோரிக்கை பொது மக்களின் ஆட்சேபனைகளுக்காக இரண்டு வாரங்களுக்கு பிரதேச செயலகம் மற்றும் அந்தந்த கிராம அலுவலர் அலுவலகம் இரண்டிலும் காட்சிப்படுத்தப்படும்.

எந்த ஆட்சேபனையும் எழுப்பப்படாவிட்டால், பிரதேச செயலாளர் விண்ணப்பத்தை அங்கீகரிக் கப்பட்ட மண்டலத்துக்குப் பொறுப்பான உதவி அல்லது உதவிப் பதிவாளர் நாயகத்திடம் ஒப்புதலுக்காகச் சமர்ப்பிப்பார்.

ஆட்சேபனைகள் எழும் சந்தர்ப்பங்களில், பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு முன் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் வருகைப் பதிவுச் சான்றிதழ்கள் தொடர்பான கோரிக்கைகளுக்கு, அதே நடைமுறையின்கீழ் விண்ணப்பங்களை ஏற்றுக்கொண்டு, முறையான விசாரணைகளை நடத்தி, அதற்கேற்ப சான்றிதழ்களை வழங்குமாறு பிரதேச செயலாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் பதிவாளர் நாயகம் திணைக்களம் மேலும் குறிப்பிடடுள்ளது. (அ)

# மோசடியாளர்கள் குறித்து அவதானம்!

கொழும்பு, டிசெ. 12

பேரிடர் நிவாரணம் வழங்குவதாக கூறும் மோசடிக்காரர்களிடம் இருந்து அவதானமாக இருக்குமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு அறிக்கையொன்றை வெளியிட்டு இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளது.

டித்வா புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதாகக்கூறி, பாதிக்கப்பட்டவர்களிடம் இருந்து தனிப்பட்ட தகவல்களை சில மோசடிக்காரர்கள் சமூக வலைத்தளங்கள் மற்றும் குறுஞ்செய்திகளை அனுப்பி பெறும் சம்பவங்கள் கண்காணிக்கப்பட்டுள்ளன.

பேரிடருக்குப் பின்னரான நிவாரண செயற்பாடுகளுக்கான தகவல் சேகரிப்பானது அமைச்சுடன் இணைந்த கள அலுவலர்கள் மற்றும் கிராம சேவகர்களுடன் இணைந்து மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் ஊடாக மாத்திரமே இடம்பெறுவதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே பொதுமக்கள் இது தொடர்பில் அவதானமாக இருக்குமாறும் தமது தனிப்பட்ட தகவல்களை மோசடிக்காரர்களிடம் பகிர்வதை தவிர்க்குமாறும் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.(அ)

# கடந்த 11 மாதங்களில் 2427 வாகன விபத்துகள்

கொழும்பு, டிசெ. 12

இந்த வருடத்தின் இதுவரை 2427 வாகன விபத்துக்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் எப்.யு.வுட்லர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வீதி வாகன விபத்துக்கள் காரணமாக இந்த வருடத்தின் இதுவரை 2570 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த வருடம் ஜனவரி முதல் கடந்த 8ஆம் திகதி வரை 4,821 பாரிய விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன. இந்த பாரிய விபத்துக்களால் 60 வீதமானோர் அங்கவீனமடைந்துள்ளனர். எனவே, வாகனங்களை செலுத்தும்போது, சாரதிகள் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

தங்களது வாகனங்களை செலுத்துவதற்கு முன்னதாக அவற்றின் தரம் தொடர்பிலான ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும்.

மது அருந்தாது, உரிய நடைமுறைகளை பின்பற்றி, முறையான வகையில், பொறுமையுடன் வாகனங்களை செலுத்த வேண்டும். சாரதிகளின் ஒழுக்கத்தை கண்காணிப்பதற்காக பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பொலிசார் கடமைகளில் உள்ளனர்-என்றார். (அ)

# முட்டை விலை அதிகரிக்கப்படாது

கொழும்பு, டிசெ. 12

பண்டிகைக் காலப்பகுதியில் முட்டையின் விலை அதிகரிக்கும் என சிலர் வெளியிடும் கருத்துக்களில் எவ்வித உண்மைத் தன்மையும் இல்லை என அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளில் இருந்து முட்டையை இறக்குமதி செய்யும் நோக்கில் சிலரால் இந்தத் தவறான கருத்துக்கள் வெளியிடப்படுவதாக அதன் தலைவர் சரத் ரத்நாயக்க தெரிவித்தார்.

முட்டையை 45 ரூபாவுக்கு குறைவான விலையில் வழங்க முடியும் என்று அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க மேலும் குறிப்பிட்டார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஒரு குடும்பமும் தனியாக துயரத்தை கடக்க வேண்டியதில்லை

# "மீண்டும் வாழ்க்கை தொடங்கும் வரை அரசாங்கத்தின் ஆதரவு வழங்கப்படும்"

நுவரெலியா, டிசெ. 12

"ஒரு குடும்பமும் தனியாக இந்த துயரத்தைக் கடக்க வேண்டியதில்லை. அவர்கள் மீண்டும் நம்பிக்கையுடன் வாழ்வைத் தொடங்கும் வரை அரசாங்கத்தின் ஆதரவு தொடர்ந்து வழங்கப்படும்"- இவ்வாறு கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் நுவரெலியா பயணத்தின் போது, பாதிக்கப்பட்ட மக்களிடம் தெரிவித்தார்.

அண்மையில் நுவரெலியா மாவட்டத்தில் ஏற்பட்ட கடும் மழை, வெள்ளம் மற்றும் மண் சரிவு காரணமாக பல குடும்பங்கள் தங்களது வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பு மையங்களில் தங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்த கடுமையான அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் நேரில் சென்று பார்வையிட்டார். அங்கு தற்காலிக தங்குமிடங்களில் தங்கவைக்கப்பட்டிருந்த குடும்பங்களையும் குழந்தைகளையும் நேரில் சந்தித்து, அவர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களையும் கவலைகளையும் கேட்டறிந்தார்.



இதன்போது அமைச்சர் சந்திரசேகர் கூறுகையில், மக்களின் இந்த வேதனையை உடனடி நடவடிக்கைகள் மூலம் குறைப்பது அரசாங்கத்தின் மிக முக்கியமான பொறுப்பாகும். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நிவாரண உதவிகள் தாமதம் இன்றி கிடைக்கச் செய்வதற்காக மாவட்டச் செயலாளர், கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் பிற சம்பந்தப்பட்ட துறைகளுடன் கூடி ஆலோசனைகள் நடத்தப்பட்டதாகவும் உணவு, மருந்து, உலர் உணவு, உடைகள் போன்ற அவசியமான பொருட்கள் அனைத்தும் கிடைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (எ)

# பிரதி தவிசாளர் மீது தாக்குதல்: இருவருக்கு விளக்கமறியல்

எம்.பி. உட்பட 10 பேர் தலைமறைவு

நிந்தவூர், டிசெ. 12

பாராளுமன்ற உறுப்பினர் தலைமையிலான குழு ஒன்று நிந்தவூர் பிரதேச சபைக்குள் உள்நுழைந்து பிரதி தவிசாளர் உட்பட இருவர் மீது தாக்குதல் நடத்தியிருந்தது.

இந்த சம்பவத்தில் தலைமறைவாகிய நிலையில் கைது செய்யப்பட்ட இருவரையும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றபதில் நீதிவான் நேற்று முன்தினம் புதன்கிழமை உத்தரவிட்டார்.

இதேவேளை தலைமறைவாகியுள்ள பாராளுமன்ற உறுப்பினர் உட்பட 10 பேரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பிரதேச சபையின் தவிசாளர் அண்மையில் பதவி விலக்கப்பட்டார். இந்த நிலையில் ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த பிரதி தவிசாளர் எம். ஐ. இர்பான், சபை நடவடிக்கையை மேற்கொண்டு வந்துள்ளார்.

இந்த நிலையில் கடந்த 8 ஆம் திகதி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 4 உறுப்பினர்கள், பிரதி தவிசாளர் அறைக்குள் உள் நுழைந்து சபை நடவடிக்கைகளை மேற்கொள்ள கூடாது என தெரிவித்து பிரதி தவிசாளருடன் வாக்கு வாதத்தில் ஈடுபட்ட நிலையில் அங்கு பொலிஸார் வரவழைக்கப்பட்டனர்.

அங்கு சென்ற பொலிஸார் இது நிர்வாக ரீதியான பிரச்னை. எனவே, கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்ற பிரதிப் பணிப்பாளரிடம் முறையிட்டு இதற்கான தீர்வை பெறுமாறு வாக்குவாதத்தில் ஈடுபட்ட உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியதையடுத்து அவர்கள் அங்கிருந்து வெளியேறினர்.

இதனைத் தொடர்ந்து பிரதி தவிசாளர் தனது சபை கடமைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது பிற்பகல் 02.00 மணியளவில் பிரதி தவிசாளரின் காரியாலயத்துக்குள் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் தலைமையிலான 30 பேர் கொண்ட குழுவினர் உள்நுழைந்து மேசையில் இருந்த பொருட்களை உடைத்து எறிந்து பிரதி தவிசாளர் மற்றும் உறுப்பினர் மீது தாக்குதல் நடத்தியதில் இருவரும் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

தாக்குதல் நடத்திய கும்பல் அங்கிருந்து தப்பியோடியுள்ள நிலையில் இதனைத் தொடர்ந்து சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வந்த பொலிஸார், பாராளுமன்ற உறுப்பினர் உட்பட 12 பேரை அடையாளம் கண்டு அவர்களை கைது செய்ய நடவடிக்கை மேற்கொண்டு வந்தனர். எனினும், அவர்கள் தலைமறைவாகியுள்ளனர் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. (எ)

# தண்ணீர் கொதிகலன்கள் வெடித்து பாரிய விபத்து!

நுவரெலியாவில் மக்கள் கடும் அச்சம்


நுவரெலியா, டிசெ. 12

நுவரெலியா சமர்ஹில் தோட்டத்தில் தோட்ட முகாமையாளரின் விடுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு இரண்டு தண்ணீர் கொதிகலன்கள் ஒரே நேரத்தில் வெடித்து பாரிய சத்தம் வெளிவந்தது.

சிலர் இதனை நிலநடுக்கம் என சமூக ஊடகங்களில் முறையற்ற மற்றும் உண்மைக்குப் புறம்பான செய்திகளைப் பரப்பி, பொதுமக்களிடையே குழப்பத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தி வதந்திகளைப் பரப்பியுள்ளனர் என நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா சமர்ஹில் தோட்டத்தில் தோட்ட முகாமையாளரின் விடுதியில் தண்ணீர் கொதிகலன்களில் கோளாறு காரணமாக ஒரே நேரத்தில் வெடித்து விபத்து ஏற்பட்டுள்ளது.

இதில் அதிர்ஷ்டவசமாக விடுதியில் உள்ளவர்கள் காயமின்றி உயிர் தப்பினர்.



இதனால் குறித்த விடுதியில் சுவர்களில் ஏராளமான வெடிப்பு ஏற்பட்டுள்ளதுடன், சில பொருட்கள் கடுமையாக சேதமடைந்துள்ளன.

இது நில நடுக்கம் இல்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

குண்டு வெடித்தது போல் பயங்கர சத்தம் உணரப்பட்டதாக தோட்ட பொது மக்களும் நுவரெலியா நகரை சுற்றியுள்ளவர்களும் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தால் அந்த பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. (எ)

# திருமலையில் விலை நிர்ணய குழுக்கூட்டம்

திருகோணமலை, டிசெ. 12

திருகோணமலை மாவட்டத்தின் 2026 ஆம் ஆண்டுக்கான விலை நிர்ணயக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் மாவட்ட அரசாங்க அதிபர் ஜி. எம். ஹேமந்த குமார தலைமையில் மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

குறிப்பாக கட்டடத் துறைக்கான மூலப்பொருட்களின் விலைகள், வாகன வாடகை கட்டணங்கள், தொழிலாளர்களின் கூலிகள், லொறி மற்றும் டிராக்டர் வழியாகப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கான போக்குவரத்து கட்டணங்கள் தொடர்பில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இதன்போது மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. கி. விஜயதாசன், மாவட்ட பிரதம கணக்காளர் ப. ஜெயபாஸ்கர், மாவட்ட பொறியியலாளர் எம். நபீல், துறைசார்ந்த திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-12)

# தவிசாளருக்கு வாகனம் இல்லை



திருகோணமலை, டிசெ. 12

கிண்ணியா நகர சபையின் தவிசாளர் எம். எம். மஹ்தி, தற்போது தனது அலுவலக கடமைகளை நகர சபையின் உழவியந்திரத்தில் சென்று நிறைவேற்றி வருகின்றார்.

தவிசாளருக்கான வாகனம் பழுதடைந்து கைவிடப்பட்ட நிலையில் வாகனம் இன்மையால் நகர சபையின் வழமையான பணிகள் முடங்கி விடக் கூடாது என்பதற்காக உழவியந்திரத்தில் சென்று மக்களது தேவைகளை நிறைவேற்றுவதோடு அலுவலக கடமைகளையும் நிறைவேற்றி வருகின்றார். (எ-12)

ஒரு போத்தல் குடிநீர் ரூ.130

# அதிக விலைக்கு விற்பனை: ரூ. 500,000 அபராதம் விதிப்பு

நுவரெலியா, டிசெ. 12

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட விலையை விட அதிக விலைக்கு போத்தல் தண்ணீர் விற்றதாக குற்றஞ்சாட்டப்பட்டதை அடுத்து, நுவரெலியா க்ளென்பால் வீதியில் உள்ள ஒரு சுப்பர் மார்க்கெட்டுக்கு நுவரெலியா நீதிவான் நீதிமன்றம் 500,000 ரூபாய் அபராதம் விதித்துள்ளது.

அதிகபட்ச சில்லறை விலை 100 ரூபாயாக இருந்தபோதிலும், ஒரு போத்தல் குடிநீருக்கு 130 ரூபாய் வசூலித்ததாக சுப்பர் மார்க்கெட் ஒப்புக்கொண்டதை அடுத்து, நேற்று முன்தினம் இவ்வாறு அபராதம் விதிக்கப்பட் டது.

பொருளாதார அழுத்தம் அதிகரித்த காலகட்டத்தில் இதே போன்ற மீறல்களை தடுக்கவும் நுகர்வோரை பாதுகாக்கவும் இந்த அபராதம் விதிக்கப்பட்டதாக நீதிமன்ற அதிகாரிகள் தெரிவித்தனர். (எ)

# கொத்மலை நீர்த்தேக்க அணையில் கனரக வாகனங்கள் செல்லத்தடை

நுவரெலியா, டிசெ. 12

கொத்மலை நீர்த்தேக்க அணையில் கனரக வாகனங்கள் பயணிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் எம். ஜே. ஹேரத் தெரிவித்தார்.

இதற்கிடையில், மகாவலி அதிகார சபைக்கு சொந்தமான 55 ஹெக்டெயர் நிலத்தில் இடம்பெயர்ந்த மக்களை குடியேற்றத் திட்டங்கள் உள்ளதாக நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மஞ்சுள சுரவீர ஆராச்சி தெரிவித்தார்.

வான்கதவுகளைத் திறப்பது தொடர்பான வதந்திகள் பொய்யானவை என்றும் கொத்மலை நீர்த்தேக்கத்துக்கு பொறுப்பான பொறியியலாளர்கள் அறிவியல் தரவுகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

பிரதான வீதிகள் மூடப்பட்டுள்ளதால், நீர்த்தேக்க அணையின் மீது இலகுரக வாகனங்களுக்கு மட்டும் செல்ல அனுமதி வழங்கப்படும். கனரக வாகனங்கள் அணை வழியாக செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடையானது குறித்த வீதிகள் சீரமைக்கப்படும் வரை தொடரும் என அவர் தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின்..

இலட்சம் அமெரிக்க டொலர்களைப் பெற்றுள்ளது.

ஒருங்கிணைக்கப்பட்ட திட்டத்தின் மூலம் வரும் மாதங்களில் மேலும் 2.6 கோடி அமெரிக்க டொலர்களைத் திரட்ட முயற்சிப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

## இலங்கை...

தேவையான எந்த உதவியையும் வழங்க அமெரிக்கா தயாராக உள்ளது என்று அமெரிக்க அரசியல் விவகாரங்கள் தொடர்பான உப இராஜாங்க செயலாளர் அலிசன் ஹூக்கர் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் கொழும்பு வந்த அமெரிக்காவின் உப இராஜாங்க செயலர் ஜனாதிபதி அநுர குமாரவை சந்தித்து கலந்துரையாடினார்.

மேலும், இலங்கை எதிர்கொள்ளும் அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்க உதவி வழங்க முடிந்ததில் மகிழ்ச்சி அடைவதாகத் தெரிவித்த அலிசன் ஹூக்கர், அனர்த்தத்தால் இறந்த அனைவரின் குடும்பங்களுக்கும் தனது இரங்கலைத் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த நெருக்கடியான நேரத்தில் பல்வேறு நிவாரணங்கள் மற்றும் நிவாரணக் குழுக்களை நாட்டுக்கு அனுப்புவதில் அமெரிக்க ஜனாதிபதியும் அரசாங்கமும் அளித்த ஆதரவுக்கு ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க நன்றி தெரிவித்தார்.

அமெரிக்கா உட்பட உலகெங்கிலும் உள்ள அனைத்து நட்பு நாடுகளும் இலங்கைக்கு அளித்த மனப்பூர்வமான ஆதரவை இதன்போது ஜனாதிபதி பாராட்டினார்.

நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தி பொருளாதார குறிகாட்டிகளை உயர்த்தி வரும் நிலையிலே இலங்கை இந்த அனர்த்தத்துக்கு முகங்கொடுக்க நேரிட்டதாகச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் நீண்டகால அடிப்படையில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் எதிர்காலத்தில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

வெள்ளம் மற்றும் மண்சரிவுகளால் சேதமடைந்த நெடுஞ்சாலைகள், புகையிரதப் பாதைகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளையும், விவசாயம், கால்நடைகள், சிறிய மற்றும் மத்திய தர கைத்தொழில்கள் உள்ளிட்ட முக்கிய வருமான வழிகளையும் மீட்டெடுக்க சிறிது காலம் எடுக்கும் என்றும், இது தொடர்பாக அனைத்து நட்பு நாடுகளின் உதவிகளையும் எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி கூறினார்.

தீர்வை வரிகள் தொடர்பான பேச்சுகளை மீண்டும் தொடங்குவது குறித்து அமெரிக்கா கவனம் செலுத்துவதாகவும் அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான சுற்றுலா துறையை மேம்படுத்துவதற்கும் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் மற்றும் கடல்சார் நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கு ஆதரவளிப்பதாகவும் அலிசன் ஹூக்கர் குறிப்பிட்டார்.

போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிப்பதற்கான இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்த சந்திப்பில் தொழில் அமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஹர்ஷன சூரியப்பெரும ஆகியோருடன் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் உள்ளிட்ட குழுவினரும் பங்கேற்றனர். (ஐ)

## சிறுமி...

இது தொடர்பில் கடந்த 08ஆம் திகதி மானிப்பாய் பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டை அடுத்து 43 வயதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். அவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் எதிர்வரும் 14 நாட்களுக்கு விளக்கமறியிலில் வைக்கப்பட்டுள்ளார். (ஐ)

## பேரிடரால்...

பொறுப்புக்கூற வேண்டும் - இவ்வாறு சிறீ லங்கா பொதுஜன பெர முனவின் பொதுச் செயலர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார். தனது கட்சியின் தலைமை பணிமனையில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், வளிமண்டலவியல் திணைக்களம் காலநிலை குறித்து விடுத்த அறிவிப்புகளை அரசாங்கம் அலட்சியம் செய்துள்ளது. முன்னெச்சரிக்கை அறிவுறுத்தல்களை அடிப்படையாகக் கொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தால் உயிரிழப்புகளை தவிர்த்திருக்கலாம்.

பேரிடரால் ஏற்பட்ட உயிர் மற்றும் சொத்து இழப்புக்கு அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும். அரசாங்கம் அரசியல் பழிவாங்கல்களை மாத்திரம் முன்னிலைப்படுத்தி செயல்படுவதால் அரச நிர்வாகத்தின் அடிப்படை விடயங்கள் குறித்து அவதானம் செலுத்தப்படுவதில்லை.

பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான நிவாரணங்களை வழங்கியுள்ளோம். மக்களுக்கு வழங்கும் நிவாரணங்களை ஊடகங்களில் பகிரங்கப்படுத்தவில்லை. நாட்டு மக்கள் நெருக்கடிக்குள்ளான சந்தர்ப்பங்களில் ராஜபக்ஷர்கள் அர்ப்பணிப்புடன் செயல்பட்டுள்ளார்கள்- என்றார். (ஐ)

## பேரிடர்...

தெரிவிக்குமாறும் இந்தக் கடினமான தருணத்தில் இலங்கைக்கான தமது ஆதரவை உறுதிப்படுத்துமாறும் பாப்பரசர் 14ஆம் லியோ தம்மிடம் தெரிவித்தார் என்று நேற்றைய தினம் லூர்ச்சினி தெரிவித்தார்.

“இந்தப் பேரிடரின் பின்னரான சூழ்நிலையில் நாட்டை மீளக் கட்டியெழுப்பும் முயற்சிகளில் விசுவாசம், நம்பிக்கையுடன் செயல்படுமாறு பாப்பரசர் இலங்கை மக்களைக் கோரியுள்ளார் - என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

## மதத் தலங்கைள...

மதத் தலங்களை வழமை நிலைக்குக் கொண்டு வரும் நோக்கில் இந்த நிதியுதவி அளிக்கப்படுகிறது. இதற்கான நிதியை புத்தசாசன, சமய, கலாசார விவகார அமைச்சுக்கு ஒதுக்கீடு செய்வதற்கும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை நேற்று முன்தினம் அங்கீகாரம் வழங்கியது. (ஐ)

## பாதிக்கப்பட்ட...

சமகால நிலைமை தொடர்பில் அவர் நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் ஊடக சந்திப்பிலேயே இதனை அவர் தெரிவித்தார்.

பேரிடர் தொடர்பாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் இருந்து பல்வேறு முறைப்பாடுகள் எமக்கு கிடைக்கின்றன. வெள்ளத்தால் பல பொது மக்கள் யாழ்ப்பாணத்தில் பாதிக்கப்பட்டனர். அவர்களின் சொத்துகளும் சேதமடைந்துள்ளன.

சில இடங்களில் பிரதேச செயலக மட்டத்தில் தங்களுடைய சேதம் தொடர்பான பதிவுகள் முறையாக பதியப்படவில்லை -கண்காணிக்கப்படவில்லை என்று முறைப்பாடுகள் உள்ளன. இதுசம்பந்தமாக மாவட்ட செயலாளரின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளோம்.

கிராம மட்டத்தில் கள ஆய்வு செய்து சரியான தகவல்கள் வழங்கப்பட வேண்டும்.

பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டிருந்தால் அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம். பாதிக்கப்பட்ட மக்களிடமிருந்து தங்களுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை என்ற முறைப்பாடு வரக்கூடாது என ஜனாதிபதி எமக்கு தெரிவித்துள்ளார்.

யாராவது மக்கள் முறைப்பாடு செய்தால் அதிகாரிகள் அவர்களுடன் முரண்படாது அது தொடர்பில் ஆராய்ந்து செயல்பட வேண்டும்.

அரசாங்கம் சரியான நிவாரணத்தை அறிவித்திருக்கிறது. சில மக்கள் உண்மையில் பாதிக்கப்படவில்லை. அவர்கள் மனிதாபிமானமாக செயல்பட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் செல்ல அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் - என்றார். (ஐ)

## பேராசிரியர்...

வேலுப்பிள்ளை தருமரட்ணம் (வயது 91) நேற்று வியாழக்கிழமை காலமானார்.

காரைநகரை பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்ட அவர் கொழும்பு, யாழ்ப்பாண பல்கலைக் கழகங்களில் கணிதவியல் பேராசிரியராக கடமையாற்றியிருந்தார்.

இவர், கடந்த வருடம் தனது சொத்துகளில் ஒரு பகுதியை அறக்கட்டளைக்கு வழங்கியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மண்சரிவில்...

வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக பதிவாளர் நாயகம் சசிதேவி ஜலதீபன் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கை பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசாங்க இழப்பீட்டு செயல்முறையை விரைவுபடுத்த உதவும். காணாமல் போனவர்களுக்கு மரணச் சான்றிதழ்களை வழங்குவதற்கான சட்ட ஏற்பாடுகள் தற்போது நடைமுறையில் உள்ளன.

ஒரு குடியிருப்பாளர் அனர்த்தம் காரணமாகக் காணாமல் போனமையை கிராம உத்தியோகத்தர் உறுதிப்படுத்தியவுடன் மாவட்ட பிரதி பதிவாளர் சான்றிதழை வழங்க அதிகாரம் பெறுவார்.

ஆட்சேபனைகள் எதுவும் பெறப்படாவிட்டால், பிரதேச செயலாளர் விண்ணப்பத்துக்கு ஒப்புதல் அளிக்கலாம். அதன் பின்னர், பிராந்திய பிரதி அல்லது உதவிப் பதிவாளர் நாயகத்தால் அந்த விண்ணப்பம் செயலாக்கப்படும்.

அனர்த்தத்தில் உயிரிழந்தார் என்று உறுதிப்படுத்தப்பட்ட 611 நபர்களில் 126 பேருக்கு ஏற்கனவே மரணச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும் பதிவாளர் நாயகம் குறிப்பிட்டார். (ஐ)

## யாழ்...

வானிலை சீராக இன்மையாலும் விமானத்தை தரையிறக்க முடியவில்லை. இதையடுத்து, அந்த விமானம் சென்னைக்கே திரும்பிச் சென்றது.

இதேவேளை, கொழும்பில் இருந்து வடக்கு மாகாணத்துக்கு நிவாரண பொதிகளை ஏற்றி வரும் அமெரிக்க விமானம் நேற்றைய தினமும் பலாலி விமான நிலையத்தில் தரையிறங்கி திரும்பியிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 3 வயது...

பொன்னாலை பகுதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருபவை வருமாறு,

இவ்வாறு குழந்தையை சித்திரவதை செய்தவர் அந்தக் குழந்தையின் தாயின் இரண்டாவது கணவர் என்று கூறப்படுகிறது. அவருடன் இணைந்து தாயும் குழந்தையை தாக்கியுள்ளார் என்று கூறப்படுகிறது.

அவர்களின் தாக்குதலில் குழந்தையின் உடலில் காயங்கள் ஏற்பட்டன. அந்தக் காயங்களின்மீது மிளகாய்த்தூள் இட்டதுடன், குழந்தைக்கு பச்சை மிளகாயை உண்ணக் கொடுத்ததாகவும் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பில் சங்கானை பிரதேச செயலகத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில், பிரதேச செயலக அதிகாரிகள் வட்டுக்கோட்டை பொலிஸாரின் கவனத்துக்கு இந்த விடயத்தைக் கொண்டுசென்றனர்.

இதையடுத்து, கிராம சேவகர், பிரதேச செயலக சிறுவர் தொடர்பான உத்தியோகத்தர்கள் குறித்த வீட்டுக்கு சென்ற நிலையில் கணவனும் மனைவியையும் அந்த பிள்ளையையும் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர் என்று கூறப்படுகிறது.

பிள்ளையை அவர்களிடமிருந்து மீட்டு, அவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை பொலிஸாருடன் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-05)

## இடரால்...

அறிவிக்கப்பட்டுள்ளது.

அனர்த்த முகாமைத்துவ நிலையம் வழங்கிய நேற்று காலை 6 மணி வரையிலான நிலவர அறிக்கையின்படி, இதுவரை 193 பேர் காணாமல் போனதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 639 ஆக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மலைநாட்டுப் பகுதிகளில் மண்சரிவுகள் ஏற்பட்ட பகுதிகளில் மீட்புக் குழுக்கள் இன்னும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

பகல் நேரங்களில் மட்டுமே தேடுதல் பணிகள் நடத்தப்படுகின்றன.

இந்தியாவின் தேசியப் பேரிடர் மீட்புப் படையினர் மற்றும் பாகிஸ்தானைச் சேர்ந்த மீட்புக் குழுக்கள், மோப்ப நாய்களுடன் மீட்புப் பணிகளுக்கு உதவுவதற்காக இலங்கையில் உள்ளனர்.

காணாமல் போனவர்களின் குடும்ப உறுப்பினர்கள் அல்லது உறவினர்கள் பணியைக் கைவிடுமாறு கோரினால் அன்றி, தேடுதல் பணிகள் தொடரும் என அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

சுற்றாடல் அமைச்சர் கலாநிதி. தம்மிக பட்டபெந்தி, சில மண்சரிவு இடங்களில் இன்னும் தேடுதல் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை என்று தெரிவித்தார்.

“சில இடங்களில் மண்சரிவுகள் இன்னும் தீவிரமாக உள்ளன. அங்கே சென்று தேடுதல் பணிகளை மேற்கொள்வது ஆபத்தானது. உதாரணமாக, துல்ஹிரிய பகுதியில் மக்களை மீட்க விரைந்த மூன்று பேர், மண் மேடு சரிந்து விழுந்ததில் உயிருடன் புதைந்து விட்டனர்.”

மேலும், சில இடங்களில் தொடர்ந்து பணியாற்றுவது மிகவும் கடினமானதாக இருப்பதால், தேடுதல் பணிகள் ஸ்தம்பித்துள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# பேரிடர் நிவாரணப் பணிகளில் அரசியல் தலையீடுகள் இல்லை!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

கொழும்பு, டிசெ. 12

**பேரிடர் நிவாரணப் பணிகளில் அரசாங்க அதிகாரிகளுக்கு அரசியல் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுவதாக முன்வைக்கப் படும் குற்றச்சாட்டை அரசாங்கம் அடியோடு நிராகரித்துள்ளது.**



"அரசாங்க அதிகாரிகளுக்கு அரசாங்க தரப்பில் இருந்து எவ்வித இடையூறும் விளைவிக்கப்படுவதில்லை. அரசாங்க ஊழியர்களுக்கு சுதந்திரமும், அதிகாரமும் வழங்கப் பட்டுள்ளது. அவர்களும் சிறப்பாக செயல்படுகின்றனர்." என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

"தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு சர்வதேச தொடர்பு இல்லை என விமர்சனம் முன்வைக்கப்பட்டது. ஆனால் சிறப்பான முறையில் உறவு பேணப்பட்டுவருகின்றது.

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் வெளிநாடுகளில் இருந்து கிடைக்கப் பெற்ற நிதி முறையாக பயன்படுத்தப்படாததால் சர்வதேசம் நம்பிக்கை இழந்து இருந்தது. ஆனால் எமது நிர்வாக பொறிமுறைமீது சர்வதேசத்துக்கு முழு நம்பிக்கை உள்ளது." எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## இடரால் பாதிப்புற்ற ஆசிரியர்களுக்கு நிவாரணம் வழங்குமாறு கோரிக்கை!

கொழும்பு, டிசெ. 12

நாட்டில் ஏற்பட்ட அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு நிவாரணம் வழங்குமாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின், அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நுவரெலியாவில்,அனர்த்தத்தால் ஏற்பட்ட சேதங்களையும் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களையும் பார்வையிட சென்றிருந்தபோதே, இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் ஊடகங்களுக்கு இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

அனர்த்தத்தால் பல ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.அதேபோன்று சாதாரண மக்களும் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சில வீடுகள் இடிந்து சேதமடைந்துள்ளன. இதனால் அரசாங்க ஆசிரியர்கள் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். விசேடமாக நுவரெலியாவில் உள்ள ஆசிரியர்களே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே,வீடுகளின்றி தவிக்கும் ஆசிரியர்களுக்கு நிவாரணம் வழங்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கிறோம்-என்றார். (அ)

## பதுளை மாவட்டத்தில் மண் சரிவு அபாயம்!

### 806 பேர் வெளியேற்றம்

கொழும்பு, டிசெ. 12

வடகிழக்கு பருவமழையின் ஆரம்பம் காரணமாக பதுளை மாவட்டத்தில் மண்சரிவு அபாயம் அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் 238 குடும்பங்களைச் சேர்ந்த மொத்தம் 806 குடியிருப்பாளர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

மாவட்டமெங்கும் கனமழை தொடர்ந்து பெய்து வருவதால், பாதிக்கப்பட்ட சமூகங்களை உடனடியாக பாதுகாப்பான பகுதிகளுக்கு மாற்றுமாறு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியதாக பதுளை மாவட்டச் செயலாளர் பிரபாத் அபேயவர்தன குறிப்பிட்டார்.

பதுளை மாவட்டத்திலுள்ள பதினைந்து பிரதேச செயலகப் பிரிவுகளில் பதினான்கு பிரிவுகள் மண்சரிவு அச்சுறுத்தலால் பாதிக்கப்பட்டுள்ளன.

கலுகல்ல பிரிவில் தீவிர மண்சரிவு அபாயம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, 50 குடும்பங்களைச் சேர்ந்த 129 பேர் பாதுகாப்பு மையங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

மேலும் உயர் அபாயப் பகுதிகளிலும் வெளியேற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஸ்வர்ணதோட்ட பிரிவில் 60 குடும்பங்களைச் சேர்ந்த 157 பேர் , ஊவா பரணகம பிரிவில் 40 குடும்பங்களைச் சேர்ந்த 127 பேர் , றிதிமாலியத்த பிரிவில் 50 குடும்பங்களைச் சேர்ந்த 139 பேர், மீகாகியுல பிரிவில் 35 குடும்பங்களைச் சேர்ந்த 158 பேர், ஹாலி-எல பிரிவில் 18 குடும்பங்களைச் சேர்ந்த 87 பேர், எல்ல பிரிவில் 34 குடும்பங்களைச் சேர்ந்த 148 பேரும் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர். (அ)

## டித்வா புயலால் பால் உற்பத்தி வீழ்ச்சி

கொழும்பு, டிசெ. 12

நாட்டில் ஏற்பட்ட அதிதீவிர வானிலையை அடுத்து, பால் உற்பத்தி குறைவடைந்துள்ளதாக தேசிய கால்நடை மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, ஒரு நாளைக்கு 2,000 லீற்றர் பால் உற்பத்தி குறைந்துள்ளதாக, அந்த பணியகம் சுட்டிக்காட்டியுள்ளது.

டித்வா சூறாவளியால் ஏற்பட்ட வெள்ளத்தால், சிலாபம் பகுதியில் உள்ள பால் உற்பத்தி நிலையம் ஒன்று கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் குறித்த பகுதியில் கால்நடைகளுக்கு அதிக சேதம் ஏற்படவில்லை என்றும் தேசிய கால்நடை மேம்பாட்டு பணியகம் குறிப்பிட்டுள்ளது. (அ)

## 20 இலட்சம் ரூபா இலஞ்சம் வாங்கிய மதுவரி திணைக்கள அலுவலர் கைது!

கொழும்பு, டிசெ. 12

20 இலட்சம் ரூபாவை இலஞ்சமாக பெற்ற மதுவரித் திணைக்கள அலுவலர் ஒருவரை இலஞ்சம் ஊழல் முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

உள்ளூர் மருந்து உற்பத்தி நிலையமொன்றைச் சுற்றிவளைத்து சட்டவிரோத இயந்திரங்கள் மூலம் கஞ்சா அரைக்கப்படுவதாகக் குற்றம் சாட்டி, அந்த சந்தேகநபரிடம் 20 இலட்சம் ரூபாய் பணத்தை இலஞ்சமாக கோரியதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மதுவரித் திணைக்களத்தின் போதைப்பொருள் தடுப்புப் பிரிவில் கடமையாற்றும் சார்ஜன்ட் ஒருவரே இவ்வாறு கைதாகியுள்ளார்.

கைதான சந்தேக நபரை கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

## மகிந்தவின் ஆட்சியில் வடக்கில் குறுகிய காலத்தில் மீள்குடியமர்வு

### நாமல் ராஜபக்ஷ கூறுகிறார்

கொழும்பு, டிசெ. 12

வடக்கில் பெருமளவான மக்கள் இடைத்தங்கள் முகாம்களில் இருந்தனர். போர் முடிவடைந்த பின்னர் அவர்களை குறுகிய காலப்பகுதிக்குள் மீள்குடியமர்த்துவதற்கு மஹிந்த ராஜபக்ச ஆட்சிகாலத்தில் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது என்று பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம்.பி. தெரிவித்தார்.

"அபாய வலயங்களில் வீடுகள் உள்ளன. அங்குள்ள மக்களை தற்காலிக இருப்பிடங்களுக்கு அனுப்ப வேண்டும். அதன்பின்னர் மாற்று காணிகள் தேடப்பட வேண்டும்.

வடக்கில் இடம்பெயர்ந்த மக்களை குறுகிய காலப் பகுதியில் மீள் குடியமர்த்துவதற்குரிய பொறிமுறை அன்று இயங்கியது. சுனாமி அனர்த்தத்தின் பின்னரும் மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதில் இருந்து அரசாங்கம் கற்றுக்கொள்ள வேண்டும். முன்னாள் தலைவர்களிடம் அனுபவங்களைப் பெற வேண்டும்.

பேரிடர் இழப்பு தொடர்பில் எங்கு தவறு நடந்துள்ளது என்பதை கண்டறியவே பாராளுமன்றத் தெரிவுக்குழு அமைக்குமாறு கோரியுள்ளோம். அதன்மூலம் உண்மை தெரியவரும்.

அதேபோல பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக ஜனாதிபதியால் பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்ட நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டும். இதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதனை நாம் கண்காணிப்போம். இது தொடர்பான எமது கடப்பாட்டை உரிய வகையில் நிறைவேற்றுவோம்." எனவும் நாமல் ராஜபக்ஷ எம்.பி. குறிப்பிட்டார். (அ)

## புயல் நிவாரணத் திட்டத்துக்கு 35 மில்லியன் டொலர் தேவை!

### ஐக்கிய நாடுகள் சபை

கொழும்பு, டிசெ. 12

டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட இலங்கையர்களுக்கான ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான முன்னுரிமைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த அடுத்த 4 மாதங்களுக்கு 35 மில்லியன் அமெரிக்க டொலர்கள் (சுமார் 11.4 பில்லியன் இலங்கை ரூபா) தேவைப்படும் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இலங்கையிலுள்ள ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளர் இந்தத் திட்டத்தின் முக்கிய அம்சங்களைப் பற்றித் தெரிவித்துள்ளார்.

அடுத்த 4 மாதங்களுக்கு 7 துறைகளுக்காக 35 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுவதாகவும் இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்குத் தற்போது 25 மில்லியன் அமெரிக்க டொலர்கள் (சுமார் 8.2 பில்லியன் இலங்கை ரூபா) நிதியுதவி பற்றாக்குறையாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பற்றாக்குறையை ஈடுசெய்ய உதவுமாறு ஐக்கிய நாடுகள் சபை சர்வதேச சமூகத்தை அவசரமாகக் கேட்டுக்கொண்டுள்ளது.

டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அத்தியாவசிய உதவிகளை வழங்குவதற்கும், உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் இந்த நிதி அவசியம் என்று ஐ.நா. வலியுறுத்தியுள்ளது. (அ)

# மக்களை ஆபத்துக்குள் தள்ளும் குடியேற்றங்களுக்கு இடமில்லை

## பிரதமர் திட்டவட்டம்

கொழும்பு, டிசெ. 12

"அபிவிருத்தியின் பெயரால் மக்களை ஆபத்தில் தள்ளும் குடியேற்றங்களை நிர்மாணிப்பதற்கு ஒரு போதும் இடமளிக்கப்பட மாட்டாது." என்று பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய தெரிவித்தார்.

கொழும்பு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கொழும்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவக் குழு கூட்டத்தின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே பிரதமர் இவ்வாறு கூறினார்.

"அனைத்து நிறுவனங்களுடனும் இணைந்து கொழும்பு மாவட்டத்தில் வெள்ளக் கட்டுப்பாட்டிற்கான பொதுவான திட்டமொன்றை முன்வைத்து, அதற்கேற்பச் செயற்பட வேண்டும்.

கொழும்பு மாவட்டத்தினுள் ஆபத்து நிறைந்த பகுதிகளில் வாழும் மக்களின் பாதுகாப்பின்மை தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குவது குறித்து நாம் கலந்துரையாடி வருகிறோம்" எனவும் பிரதமர் குறிப்பிட்டார். (அ)



இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.12.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org